# ஒன்டாரியோவில் உடல்நலப் பராமரிப்பு:

# அதை எப்படித் தொடங்குவது

நீங்கள் ஒன்டாரியோவில் வசித்தால் அல்லது விரைவில் இங்கு இடம் மாறிவரத் திட்டமிட்டால், மருத்துவ உதவியை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது பற்றி உங்களுக்குக் கேள்விகள் இருக்கலாம். அப்படி இருந்தால், அதைத் தொடங்குவதற்கு இது ஒரு சிறந்த இடமாக இருக்கும். மருத்துவப் பராமரிப்பைப் பற்றி ஒன்டாரியோவிலுள்ள மக்கள் கேட்கும் பொதுவான கேள்விகளுக்கு பதில்களைக் காண்பீர்கள். தகவல்களை இரண்டு பிரதான தலைப்புகளாக நாங்கள் ஒழுங்கமைத்திருக்கிறோம். அவை பின்வருமாறு:

- ஒன்டாரியோவில் இருக்கும் உடல்நலப் பராமரிப்புத் தொகுதியைப் பற்றியது
- எப்படி இணைந்துகொண்டு, மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிப்பது

*நீங்கள் இந்தத் தகவல் இதழை மேலதிக மொழிகளில் ontario.ca/healthcarebasics என்ற இணையதளத்தில் காணலாம். "வேற்று மொழிகளில் தகவல்கள்" என்ற விசைப் பொறியை அழுத்தவும். ஒன்டாரியோவில் மருத்துவப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வது பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்வதற்கான இணைப்பையும் இந்த இணையதளம் உங்களுக்குக் கொடுக்கும்.*

## ஒன்டாரியோவில் மருத்துவப் பராமாரிப்புத் தொகுதியைப் பற்றியது

1. **ஒன்டாரியோவில் உடல்நலப் பராமரிப்புக்காக யார் பணம் செலுத்துவார்?**

நீங்கள் ஒன்டாரியோவில் வசித்தால், உங்களுக்குத் தேவைப்படும் அநேக மருத்துவப் பராமரிப்புச் சேவைகளுக்குப் பொதுமக்களால் நிதியுதவியளிக்கப்படுகிறது. அதாவது, உங்களுக்கான செலவு முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அரசாங்கமே செலுத்தும். சேவைகள் பின்வருவனவற்றை உட்படுத்தும்:

- உங்கள் குடும்ப மருத்துவர் மற்றும் மருத்துவ நிபுணர்களின் சந்திப்புகள்
- அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவமனையில் தங்கியிருத்தல் உட்பட, பெரும்பாலான அடிப்படை மற்றும் அவசரச் சிகிச்சை நிலை மருத்துவப் பராமரிப்புச் சேவைகள்

Tamil – Health Care in Ontario: Getting Started Cat# 015570 Nov/2010 © Queen's Printer for Ontario

Ontario

இந்தச் சேவைகளுக்கு கட்டணம் செலுத்துவதற்காக, ஒன்டாரியோ, Ontario Health Insurance Plan ஏற்பாடு செய்திருக்கிறது. ஒன்டாரியோவிலுள்ள பெரும்பாலான மக்கள் இந்தத் திட்டத்தை அதன் சுருக்கப் பெயரான OHIP என்பதாக அழைக்கின்றனர். ஒன்டாரியோ பிரஜைகள் வரிகளைச் செலுத்தும்போது, அவற்றுள் ஒரு பகுதி, உடல்நல சேவைக்குச் செலுத்துவதற்காக இந்தத் திட்டத்துக்குச் செலுத்தப்படுகிறது. OHIP திட்டத்துக்குட்படுவதற்காக, நீங்கள் அதில் இணைந்து கொள்ளவேண்டும். பின்பு மருத்துவர்கள் மற்றும் வேறு மருத்துவப் பராமரிப்பளிப்பவர்கள் உங்களுக்கு அளிக்கும் சேவைகளுக்காக OHIP இடம் கட்டணச் வசூலிப்பார்கள்.

*குறிப்பு: OHIP க்கு நீங்கள் தகுதியற்றவரானால், ஒன்டாரியோவில் இருக்கும்போது உங்கள் சொந்த உடல்நலப் பராமரிப்புச் செலவை நீங்களே செய்யவேண்டும். அல்லது தனியார் உடல்நல காப்பீடு வாங்குவதுபற்றி நீங்கள் சிந்திக்கலாம். தனியார் காப்பீட்டுடன், ஒரு நிறுவனத்துக்கு, குறிப்பிட்ட சில மருத்துவப் பராமரிப்புச் செலவுகளைச் செய்வதற்காக, அவர்களுக்கு ஒரு மாதாந்தர கட்டணத்தைச் செலுத்துவீர்கள். நீங்கள் OHIP க்குத் தகுதியானவர்களாக இருந்தாலும், அவர்கள் செலுத்தாத சில சேவைகளுக்காகத் தனியார் காப்பீட்டையும் நீங்கள் உபயோகிக்கலாம்.*

### 2. ஒன்டாரியோ உடல்நல காப்பீட்டுத் திட்டத்துக்கு Ontario Health Insurance Plan (OHIP) யார் பணம் செலுத்துவார்கள்?

OHIP என்பது ஒன்டாரியோவுக்காக அரசாங்கத்தால் இயக்கப்படும் உடல்நலத் திட்டம். இதற்கு ஒன்டாரியோவில் குடியிருப்பவர்கள் மற்றும் வியாபாரிகளினால் செலுத்தப்படும் வரிப்பணத்தினால் நிதியுதவியளிக்கப்படுகிறது.

### 3. என்ன வகையான மருத்துவ சேவைகளை ஒன்டாரியோ உடல்நலக் காப்பீட்டுத் திட்டம் Ontario Health Insurance Plan (OHIP) வழங்குகிறது?

ஒன்டாரியோவில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அடிப்படை மருத்துவ மற்றும் அவசர சிகிச்சை நிலை சேவைகள் பெரும்பாலானவற்றிற்கு, மருத்துவரீதியான காரணங்களுக்காக அவை உங்களுக்குத் தேவைப்படும்போது OHIP கட்டணம் செலுத்துகிறது. OHIP இனால் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளை பின்வரும் அட்டவணை தருகிறது:

| OHIP பின்வருவனவற்றிற்காகப் பணம் செலுத்தும்: | OHIP பின்வருவனவற்றிற்காகப் பணம் செலுத்தாது: |
|---|---|
| • கனடா நாட்டில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பெரும்பாலான அடிப்படை மருத்துவ மற்றும் அவசர சிகிச்சை நிலை சேவைகள் - மருத்துவக் காரணங்களுக்காக அவை உங்களுக்குத் தேவைப்படும்போது<br>• நீங்கள் கனடா நாட்டுக்கு வெளியே வசிக்கும்போது நீங்கள் பெற்றுக்கொள்ளும் சில அவசர நிலைச் சிகிச்சைச் சேவைகள். நீங்கள் கனடா நாட்டுக்கு வெளியே வசிக்கும் கால அளவைப் பொறுத்ததில் குறிப்பிட்ட சில விதிமுறைகள் செயற்படுத்தப்படும். | • ஒப்பனை அறுவைச் கிகிச்சை போன்ற அநாவசியமான சேவைகள்<br>• மருந்துக் குறிப்புள்ள மருந்துப் பொருட்கள், பல் பராமரிப்பு மற்றும் பெரும்பாலான கண் பரிசோதனைகள்<br>• இல்லப் பராமரிப்பு சேவைகள், அம்புலன்ஸ் சேவைகள் மற்றும் ஒன்டாரியோவுக்கு வெளியே நீண்ட-காலப் பராமரிப்பு |

## மருத்துவ உதவிக்கா இணைந்துகொண்டு அதைத் தொடங்குவது எப்படி

### 4. உடல்நலப் பராமரிப்புக்காக, ஒன்டாரியோவின் உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக நான் விண்ணப்பிக்க முடியுமா Ontario Health Insurance Plan (OHIP)?

OHIP க்கு விண்ணப்பிப்பதற்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று கேள்விகளுக்கு நீங்கள் ‘ஆம்’ என பதிலளிக்க முடிந்தவர்களாக இருக்கவேண்டும்:

- உங்கள் பிரதானமான இல்லம் அல்லது வசிப்பிடம் ஒன்டாரியோவிலா?
- நீங்கள் ஒன்டாரியோவில் வசித்த முதல் ஆறு மாதங்களில், 30 நாட்களுக்குக் குறைவாக வெளியே வசித்தீர்களா?
- ஏதாவது 12-மாதக் காலப்பகுதியில் குறைந்தது 153 நாட்களாவது ஒன்டாரியோவில் வசித்தீர்களா?

குறிப்பிட்ட வேறு சில நிபந்தனைகளும் பொருந்தும். உதாரணமாக, பின்வரும் நிலைமைகளில் நீங்கள் OHIP க்குத் தகுதிபெற மாட்டீர்கள்:

- ஒரு விருந்தினர் அல்லது சுற்றுலாப் பயணி
- அகதி அந்தஸ்த்தைக் கோருபவர்

- ஏதாவது 12-மாதக் காலப்பகுதியில் 153 நாட்களுக்கு மேலாக ஒன்டாரியோவுக்கு வெளியே வசித்திருந்தால்
- இங்கே, உங்கள் முதல் 183 நாட்களில் 30 நாட்களுக்கு மேலாக ஒன்டாரியோவுக்கு வெளியே வசித்திருந்தால்
- ஒரு வெளிநாட்டு மாணவர் அல்லது, சில நிலைமைகளில், ஒரு வெளிநாட்டுப் பணியாளர்

OHIP க்கு யார் விண்ணப்பிக்கமுடியும் என்பது பற்றி, இணையதளத்தில் மேலதிகமானவற்றை நீங்கள் கற்றுக்கொள்ளலாம்.

*குறிப்பு:* நீங்கள் ஒன்டாரியோவுக்குப் புதிதாக வந்திருந்தால், OHIP உங்கள் மருத்துவச் செலவைச் செய்வதற்கு மூன்று-மாதக் காத்திருப்புக் காலம் இருக்கிறது. ஆயினும், நீங்கள் அங்கு சென்றவுடனேயே OHIP அட்டைக்காக விண்ணப்பிப்பது ஒரு நல்ல யோசனை. காத்திருப்புக் காலத்தைச் சரி செய்வதற்காக, தனியார் காப்பீட்டை வாங்குவது பற்றி நீங்கள் சிந்திக்கலாம்.

## 5. ஒன்டாரியோவின் உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்துக்காக Ontario Health Insurance Plan (OHIP) நான் எப்படி விண்ணப்பம் செய்வது?

உங்களுக்கு மிக அருகாமையிலிருக்கும் சர்வீஸ்ஒன்டாரியோ – ServiceOntario அலுவலகத்துக்கு நீங்கள் நேரடியாகச் சென்று விண்ணப்பிக்கவேண்டும்.

விண்ணப்பிப்பதற்கு நீங்கள் பின்வருவனவற்றைச் செய்யவேண்டும்:

- ஒன்டாரியோ உடல்நலக் காப்புறுதிக்காகப் பதிவு செய்வதற்கு (பாரம் 0265-82) **ஒரு பாரத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.** பாரத்தின் ஒரு பிரதியை சேர்விஸ்ஒன்டாரியோ அலுவலகத்தில், அல்லது ஒரு பிரதியை இணைய தளத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- உங்கள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு, நீங்கள் ஒன்டாரியோவில் வசிக்கிறீர்கள் என்பதை நிரூபிப்பதற்கு மற்றும் குடிவரவுத் தேவைகளைப் பூர்த்திசெய்கிறீர்கள் என்பதைக் காண்பிப்பதற்கு **அசல் ஆவணங்களை வழங்கவும்.**

## 6. ஒன்டாரியோவின் உடல்நலப் பராமரிப்புத் தொகுதியின் மூலமாக எனக்கு உதவி தேவைப்படும்போது நான் என்ன செய்யவேண்டும்?

நீங்கள் மருத்துவ உதவிக்காகச் செல்லும்போது உங்கள் ஒன்டாரியோ உடல்நல அட்டையைக் காண்பிக்கவேண்டும். உங்கள் உடல்நலப் பராமரிப்பு சேவைகளுக்கு ஒன்டாரியோ உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தால் (OHIP) பணம் செலுத்தப்படுவதற்கு உங்களுக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது

என்பதை இந்த அட்டை நிரூபிக்கும். நீங்கள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படும்போது அட்டையைப் பெற்றுக்கொள்வீர்கள். ***அட்டையை எப்போதும் கைவசம் வைத்துக்கொள்ளவும்.***

உதவிக்காக எங்கே போவீர்கள்? அது உங்களுக்குத் தேவைப்படும் உதவியின் வகையைப் பொறுத்திருக்கிறது. உங்கள் உடல்நலப் பராமரிப்புத் தெரிவுகளைப் பின்வரும் அட்டவணை தருகிறது:

| உடல்நலப் பராமரிப்பு பற்றிய தெரிவுகள் | .... என்றால் என்ன | உங்களுக்குத் தேவைப்படும்போது... |
|---|---|---|
| டெலிஹெல்த் (1-866-797-0000) | இது ஒரு இலவசமான, அந்தரங்கத் தொலைபேசிச் சேவை. உடல்நலம் பற்றிய ஆலோசனை அல்லது பொது உடல்நலத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஒரு பதிவு செய்யப்பட்ட தாதியை நீங்கள் அழைக்கலாம். | நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு பகல் அல்லது இரவில் எந்த நேரத்திலும் உதவி தேவைப்படும்போது:<br>▪ உங்களை நீங்களே பராமரித்துக்கொள்ளவும்<br>▪ உங்கள் மருத்துவருடன் ஒரு சந்திப்புத் திட்டத்தை ஏற்படுத்தவும்<br>▪ கிளினிக் ஒன்றுக்குச் செல்லவும்<br>▪ ஒரு சமூக சேவை நிலையத்தைத் தொடர்பு கொள்ளவும்<br>▪ ஒரு மருத்துவமனை அவசரச் சிகிச்சை நிலை அறைக்குச் செல்லவும் |
| மருத்துவர்கள் மற்றும் வேறு குடும்ப உடல்நலப் | இது உங்கள் குடும்ப மருத்துவர் மற்றும் தாதிகளை உட்படுத்தும். அவர்கள் குடும்ப மருந்துகள், நோய்களைக் கண்டுபிடித்துச் | அவசர நிலையற்ற சூழ்நிலைமைகளில் உங்களுக்குப் பராமரிப்புத் தேவைப்படும்போது |

| உடல்நலப் பராமரிப்பு பற்றிய தெரிவுகள் | …. என்றால் என்ன | உங்களுக்குத் தேவைப்படும்போது… |
|---|---|---|
| பராமரிப்பளிப்பவர்கள் | சிகிச்சையளித்தல், எல்லா வயது நோயாளிகளின் உடல்நல ஒழுங்கீனங்கள் மற்றும் காயங்கள் போன்றவற்றில் கவனத்தை ஒருமுகப்படுத்துவர். | |
| குடும்ப உடல்நலக் குழுக்கள் | உறுப்பினராகச் சேர்ந்திருக்கும் நோயாளிகளுக்கு முடிந்தளவு மிக அதிகமான தரமுள்ள பராமரிப்பை அளிப்பதற்காக, ஒரு குடும்ப உடல்நலக் குழு, வேறுபட்ட உடல்நலப் பராமரிப்பாளர்களைக் ஒன்றுசேர்ப்பார்கள். குழுக்கள், உடல்நல பராமரிப்புப் தெரிவுகள் பலவற்றை உங்களுக்கு அளிப்பதற்காக தாதிகள் மற்றும் வேறு தொழில் நெறிஞர்களைக் கொண்டிருப்பார்கள். | அவசர மருத்துவ நிலையல்லாத சூழ்நிலைகளில் உங்களுக்குப் பராமரிப்புத் தேவைப்படும்போது |
| விசேட தாதித் தொழில் செய்பவர்களின் கிளினிக்குகள் | இந்த கிளினிக்குகளில், அடிப்படை மருத்துவப் பராமரிப்பை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் ஆரோக்கியமாக இருப்பது மற்றும் நோய்களைத் தடுப்பது பற்றியும் கற்றுக்கொள்ளலாம். உங்களுக்குத் தேவைப்படக்கூடிய வேறு சேவைகள் மற்றும் சமுதாய-அடிப்படையிலான திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் | உங்களுக்கு ஒரு குடும்ப மருத்துவர் இல்லை மற்றும் அடிப்படை மருத்துவப் பராமரிப்பு தேவைப்பட்டால் |

| உடல்நலப் பராமரிப்பு பற்றிய தெரிவுகள் | …. என்றால் என்ன | உங்களுக்குத் தேவைப்படும்போது… |
|---|---|---|
| | கிளினிக்குகள் உங்களுக்கு உதவி செய்யும். | |
| சமூக உடல்நல மையங்கள் | தனிப்பட்டவர்கள், குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களுக்கு உடல் நலம் மற்றும் உடல்நல முன்னேற்றத் திட்டங்களை மையங்கள் அளிக்கின்றன. | பின்வருவன போன்ற தடைகள் காரணமாக, உடல்நலப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும்போது:<br>▪ மொழி<br>▪ கலாச்சாரம்<br>▪ உடல்ரீதியான அங்கவீனங்கள்<br>▪ வீடற்ற நிலமை<br>▪ வறுமை<br>▪ தொலை தூரத்திலுள்ள இருப்பிடங்கள் |
| வோக்-இன் மற்றும் அலுவலக நேரத்திற்குப் பிந்திய மணி நேரங்களில் செயற்படும் கிளினிக்குகள் | இது, சாதாரணமான , அவசர மருத்துவ நிலையற்ற தேவைகளுக்கு நீங்கள் பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய, மருத்துவமனையை அடிப்படையாகக் கொண்டிராத ஒரு சிகிச்சை நிலையம். சிகிச்சை நிலைய அலுவலக நேரங்கள் பெரும்பாலும், மாலை மற்றும் வார இறுதி நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருக்கும். | அவசர மருத்துவ நிலையற்ற சூழ்நிலைமைகளில் உங்களுக்குப் பராமரிப்புத் தேவைப்படும்போது. |

| உடல்நலப் பராமரிப்பு பற்றிய தெரிவுகள் | …. என்றால் என்ன | உங்களுக்குத் தேவைப்படும்போது… |
|---|---|---|
| | பெரும்பாலும், ஒரு சந்திப்புத் திட்டம் இல்லாமலேயே நீங்கள் உள்ளே செல்லலாம். | |
| அவசரப் பராமரிப்பு மையம் | அவசர மருத்துவப் பராமரிப்பு நிலையங்கள் உயிரை அச்சுறுத்தும் நிலைமைகள் அல்லாதபோது பகல் நேரங்களில், மாலையில் மற்றும் வார இறுதி நாட்களில் உதவி அளிக்கும். இந்த மையங்கள், அறுவைச் சிகிச்சை தவிர, மற்ற எல்லா வகையான சேவைகளையும் அளிக்கும். | அவசர சிகிச்சை தேவைப்படாத, மிகச் சிறிய அல்லது சிக்கலற்ற நிலைமைகளில் உங்களுக்கு உடனடியான பராமரிப்புத் தேவைப்படும்போது. **உதாரணமாக:** கண் காயங்கள், புண்கள், அவயவங்கள் முறிதல், எக்ஸ்ரேக்கள் மற்றும் ஆய்வுகூடப் பரிசோதனைகள் போன்றவை. |

**7. ஒன்டாரியோவிலுள்ள உடல்நலப் பராமரிப்புத் தொகுதியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக எனக்குக் கேள்விகள் இருக்கின்றன. நான் யாரை அழைக்க முடியும்?**

காலை 8:30 முதல் மாலை 5:00 மணிவரை சேர்விஸ் ஒன்டாரியோவை இன்ஃபோலைனில் தொடர்பு கொள்ளவும். பணியாளர்களால் ஆங்கிலம், பிரெஞ் மற்றும் வேறு 20 மொழிகளில் உங்களுக்கு உதவி செய்ய முடியும். பின்வரும் எண்ணை அழைக்கவும்:

- 1-866-532-3161
- டிடிவை 1-800-387-5559
- டொரொன்டோவில், டிடிவை 416-327-4282

இங்கு மேலுமதிகத்தை இணையத்தளத்தில் கற்கலாம் health.gov.on.ca